சார்பு நீதிமன்றம், பத்மனாபபுரம்

முன்னிலை: திரு. K. மாரியப்பன், பி.ஏ., பி.எல்.,

சார்பு நீதிபதி

2024–ம் ஆண்டு ஜீலை திங்கள் 24–ம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண் 176/2022 ல் உள்ள**

**இ.ம.எண் 01/2023**

**CNR. No.TNKK07-000267-2022**

சுபாகர் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. ரெஜின்
2. பிரபா மேரி

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு 13.06.2024 தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S. ஆனந்த் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு சம்மன் சார்பு செய்து அழைத்தும் ஆஜராகாததால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளை பொறுத்து ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்காவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இதுநாள்வரையில் எனது கவனமான பரிசீலனையின்கீழ் இருந்து வந்த பின் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்:

**உத்தரவு**

இம்மனுவானது இந்திய முத்திரை தாள் சட்டம் 35 மற்றும் பிரிவு 151–ன் கீழ் அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 18,07.2019 தேதியிட்ட கடன் ஒப்புதல் ஆவணத்திற்கு சட்டப்படியான முத்திரைக்கட்டணத்தை செலுத்தி வைக்க உத்தரவிட கோரி தாக்கல் செய்துள்ளார்.

K MARIAPPAN
Digitally signed by K MARIAPPAN
Date: 2024.07.24 16:34:25 +0530

2. மனுதாரர் தனது மனுவில் அசல் வழக்கினை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதியிடமிருந்து ரூ.10,00,000/— திரும்ப பெற தாக்கல் செய்துள்ளதாகவும், எதிர்மனுதாரர்கள் தன்னிடம் வாங்கிய கடன் தொகை ரூ.10,00,000/—த்திற்காக கொடுத்த ஒப்புதல் ஆவணம் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அதற்கு தகுந்த முத்திரை கட்டணம் செலுத்திவைக்க அனுமதிக்கவேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார்.

3. மனுதாரர் அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணம் பரிசீலித்து பார்க்கப்பட்டது. அந்த ஆவணம் சம்மத ஆவணம் என்ற பெயரில் உள்ளது. மேலும் அதில் **ரூ.10,00,000/—ரூபாயை 29.06.2019 அன்று நாங்கள் உங்களிடமிருந்து ரொக்கம் பற்றியிருப்பதும்** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மேற்படி ரூ.10,00,000/—த்தை ஒரு வருடத்தில் ஒப்படைத்து விடுவதாகவும் உறுதியளிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி ஆவணம் கடனுறுதிசீட்டாக இல்லாமல் சம்மத ஆவணமாக இருப்பதால் கடனுக்கு அல்லாமல் மனுதாரரிடமிருந்து பெற்றுக்கொண்ட தொகைக்கு ஒப்புதல் ஆவணமாக எழுதி கொடுக்கப்பட்டுள்ளபடியால் அந்த ஆவணத்திற்கு முத்திரை கட்டணம் எதுவும் செலுத்த தேவையில்லை என நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும் மனுதாரர் சார்ந்துள்ள ஆவணத்தை குறியீடு செய்ய எவ்வித தடையும் இல்லாததால் இம்மனு அவசியம் இல்லாத ஒன்று என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

K MARIAPPAN

Digitally signed by K MARIAPPAN
Date: 2024.07.24 16:34:33 +0530

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024–ம் ஆண்டு ஜீலை திங்கள் 24 ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K MARIAPPAN Digitally signed by K MARIAPPAN Date: 2024.07.24 16:34:41 +0530

சார்பு நீதிபதி

பத்மனாபபுரம்.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் :**

– இல்லை –

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் :**

– இல்லை –

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :**

– இல்லை –

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :**

– இல்லை –

K MARIAPPAN Digitally signed by K MARIAPPAN Date: 2024.07.24 16:34:48 +0530

சா நீ,

பத்மனாபபுரம்

PSC

Draft/Fair Order

I.A.No.01/2023

O.S.No.176/2022
Dt. 24.07.2024